# விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சு
# தேசிய விஞ்ஞான மன்றம்

தேசிய விஞ்ஞான மன்றம் 1994ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திச் சட்டத்தினால் நிறுவப்பட்டு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சின் கீழ் செயற்படும் நிறுவனமாகும். இந்த நிறுவனம் நாட்டின் நிலையான சமூக பொருளாதார அபிவிருத்தியின் பொருட்டு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தை மேம்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளது. பின்வரும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## 1. பணிப்பாளர் நாயகம் / பிரதான நிறைவேற்று அதிகாரி (01)

விஞ்ஞானம் / விவசாய விஞ்ஞானம் / வியாபார நிர்வாகம் அல்லது வேறு ஏதாவது இயைபுடைய துறையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் விஞ்ஞானமாணிப் பட்டம்.

**மற்றும்**

அ) விஞ்ஞானம் / விவசாய விஞ்ஞானம் / வியாபார நிர்வாகம் அல்லது வேறு ஏதாவது இயைபுடைய துறையில் பட்டப்பின் படிப்புத் தகைமை அல்லது முகாமைத்துவம் தொடர்பாக அங்கீகாரம் பெற்ற தொழில்சார் நிறுவனத்தின் கூட்டு அங்கத்துவம் (Corporate Membership)

**மற்றும்**

ஆ) ஆரம்பப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் கூட்டுத்தாபனம், சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நிறுவனமொன்றில் சிறந்த சாதனைப் பதிவுடன் முகாமைத்துவ மட்டத்தில் 20 வருட அனுபவத்தைக் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன் இதில் 05 வருடங்கள் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்திலாக இருக்க வேண்டும்.

**அல்லது**

2. விஞ்ஞானம் / விவசாய விஞ்ஞானம் / வியாபார நிர்வாகம் அல்லது வேறு ஏதாவது இயைபுடைய துறையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் விஞ்ஞானமாணிப் பட்டம்.

**மற்றும்**

அ) விஞ்ஞானம் / விவசாய விஞ்ஞானம் / வியாபார நிர்வாகம் அல்லது வேறு ஏதாவது இயைபுடைய துறையில் கலாநிதிப் பட்டம்

**மற்றும்**

ஆ) ஆரம்பப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் கூட்டுத்தாபனம், சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நிறுவனமொன்றில் சிறந்த சாதனைப் பதிவுடன் 05 வருடங்கள் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் அனுபவத்தைக் கொண்டிருக்க வேண்டும்.

**உள்வாரி**

1) மேலதிக பணிப்பாளர் பதவியில் குறைந்தபட்சம் மூன்று (03) வருடகால அனுபவம்

**மற்றும்**

பல்வேறு துறை குழுக்களை முகாமைத்துவம் செய்யும் ஆற்றல், மனித வளம் மற்றும் ஏனைய வளங்களை முறையாகப் பயன்படுத்துதல் மற்றும் வினைத்திறனுடன் முகாமைத்துவம் செய்யும் ஆற்றலைக் கொண்டிருக்க வேண்டும்.

**வயதெல்லை:**

40 வயதிற்குக் குறையாமலும் 50 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

**சம்பள அளவு மற்றும் குறியீடு:**

HM2-3 ரூபா (173,000/- 12×4,850 – 231,200/-)

(அடிப்படைச் சம்பளம்: **2025** - ரூபா 127,651/-)

இதற்கு மேலதிகமாக, ஒதுக்கப்பட்டுள்ள வாகனம் அல்லது போக்குவரத்துக் கொடுப்பனவு 50,000.00, எரிபொருள் கொடுப்பனவு (145 லீற்றருக்கு), தொடர்பாடல் கொடுப்பனவு 4,250.00 மற்றும் தொழில்சார் கொடுப்பனவு 25,000.00 வழங்கப்படும்.

**பதவிக்குரித்தான பிரதான கடமைகள்:**

- விஞ்ஞான சமூகம் மற்றும் பொதுமக்களுக்கு சேவைகளை வழங்குவதை மேம்படுத்துவதற்கான திட்டங்களை வகுத்து, நேரடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- 1994ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப மேம்பாட்டுச் சட்டத்தின் கீழ் NSF க்கு ஒப்படைக்கப்பட்ட கடமைகளை நிறைவேற்றுவதற்கான வருடாந்த வரவு செலவுத் திட்டங்கள் உட்பட இலக்குகள், நோக்கங்கள் மற்றும் உத்திகளை வகுத்தல், புதுப்பித்தல்.
- தேசிய விஞ்ஞான மன்றத்தின் ஒட்டுமொத்த நிர்வாகம் மற்றும் நிதி கட்டுப்பாடு.
- தொடர்புடைய கொள்கை முயற்சிகளை உருவாக்குதல்.
- சபை கொள்கை விஷயங்கள் மற்றும் சபையின் முடிவுகளை செயற்படுத்துதல் குறித்து ஆலோசனை வழங்குதல்.
- பல்கலைக்கழகங்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் விஞ்ஞான சேவைகளை வழங்குவதில் ஈடுபட்டுள்ள பிற பொது மற்றும் தனியார் துறை நிறுவனங்களுக்கு இடையேயான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளில் கலந்துகொள்வது.
- NSF சார்பாக உள்நாட்டு மற்றும் சர்வதேச மாநாடுகள், கருத்தரங்குகள், செயலமர்வுகள் போன்றவற்றில் பங்குபற்றுதல்.
- அதிகாரபூர்வ அறிக்கைகள் மற்றும் வெளியீடுகளுக்கான ஒட்டுமொத்த பொறுப்பு.
- செயற்றிறன் மதிப்பீடுகள் உட்பட மனிதவள மேம்பாட்டுத் திட்டங்களின் வடிவமைப்பு மற்றும் செயற்படுத்தலுக்கான ஒட்டுமொத்த பொறுப்பு.

EPF மற்றும் ETF சகிதம் திறைசேரியினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய ஊக்குவிப்புக் கொடுப்பனவு பிரதிபலன்கள் உள்ளடங்கும். மேற்கூறிய சம்பளத்திற்குப் புறம்பாக அவ்வப்போது அரசாங்கத்தினால் பரிந்துரைக்கப்படும் கொடுப்பனவு / வாழ்க்கைச் செலவுப் படி என்பவற்றுக்கு தெரிவு செய்யப்படும் அபேட்சகர் உரிமையைப் பெறுவார்.

சுயதரவு, கல்வி மற்றும் தொழில்சார் திறன் சான்றிதழ்களின் பிரதிகள் மற்றும் உறவினரல்லாத இரு சான்றுபகர்வோரின் பெயர் மற்றும் முகவரி சகிதம் பதிவுத் தபால் மூலம் விண்ணப்பிக்கவும். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்திற்கு எந்தவொரு வகையிலும் ஆதரவைப் பெற்றுக்கொள்ள செயற்படுதல் தகுதியீனமாகும். அரசாங்கம் அல்லது அரை அரசாங்க நிறுவனத்தில் சேவையில் உள்ள விண்ணப்பதாரர்கள் தமது நிறுவனத்தின் தலைமையின் ஊடாக விண்ணப்பப் படிவத்தை அனுப்ப வேண்டும். தேசிய விஞ்ஞான மன்றம் தொடர்பான மற்றும் வெற்றிடங்கள் தொடர்பான தகவல்களை **www.nsf.gov.lk** எனும் இணையதளத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பப் படிவங்களை விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சு, 3ஆம் மாடி, செத்சிறிபாய - கட்டம் 1, பத்தரமுல்ல எனும் முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

**விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாள்: 2025-08-24.**

**செயலாளர்,**
**விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சு,**
**3ஆம் மாடி,**
**செத்சிறிபாய - கட்டம் 1,**
**பத்தரமுல்ல.**


**3ஆம் மாடி, செத்சிறிபாய - கட்டம் 1, பத்தரமுல்ல. இலங்கை.**
**தொலைபேசி இல. +9411 2879410**
**மின்னஞ்சல்: mostadmdiv@gmail.com**
**இணையதளம்: www.most.gov.lk**

**47/5, மெயிட்லன்ட் பிளேஸ், கொழும்பு 7, இலங்கை**
**தொலைபேசி இல. +94112696771**
**மின்னஞ்சல்: info@nsf.gov.lk**
**இணையதளம்: www.nsf.gov.lk**